**செ. கு. எண்: 007** **நாள்: 11.01.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்

அறிக்கை - 11.1.2018

**1)** திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டத்திலுள்ள **நல்லதங்காள் ஓடை நீர்தேக்க** பாசனப் பகுதி மற்றும் **உடையார்குளப் பாசனப் பகுதிகளுக்கு** பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டத்திலுள்ள நல்லதங்காள் ஓடை நீர்தேக்க பாசனப் பகுதி மற்றும் உடையார்குளப் பாசனப் பகுதிகள் பயனடையும் வகையில் நல்லதங்காள் நீர்த்தேக்கத்திலிருந்து **19.1.2018 முதல் 30.1.2018 வரை** தகுந்த இடைவெளிவிட்டு தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டத்தில் உள்ள **4831.36 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும்.

**2)** சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், பாப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள **கரிக்கோயில் நீர்த்தேக்கத்திலிருந்து** ஆற்று பாசனம் மற்றும் கால்வாய் பாசன பகுதிகளுக்கு தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, கரிக்கோயில் நீர்த்தேக்கத்திலிருந்து குடிநீர் தேவைக்காகவும், பழைய ஆயக்கட்டு பகுதிகள் பயன்படும் வகையில் **12.1.2018** முதல் **20.1.2018** வரை **102** கன அடி வீதம் **8** நாட்களுக்கும், புதிய ஆயக்கட்டு பகுதிகள் பயன்படும் வகையில் **20.1.2018 முதல்** அணையின் வலது மற்றும் இடது மதகுகள் மூலம் தினசரி வினாடிக்கு **40** க.அடி **12** நாட்களுக்கும் சுழற்சி முறையில் சிறப்பு நனைப்பாக தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**